**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 166** **நாள் : 01.10.2024**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சட்ட விரோதமாக பொது இடங்களில் குப்பைகள் / கட்டட இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுவது மற்றும் திடக்கழிவு மேலாண்மையை சரியாக பின்பற்றப்படாமை போன்ற விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீது திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2019 அட்டவணை-IVன்படி பெருநகர சென்னை மாநகராட்சியால் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பொது இடங்களில் குப்பைகள் / கட்டட இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுவதைத் தவிர்க்கவும், திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டினை மேம்படுத்தவும், கடந்த ஐந்து வருடங்களாக அமுலில் உள்ள அபராதத் தொகையானது தற்போது கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | துணைப் பிரிவுகள் / பிரிவு விபரங்கள் | தற்போது உள்ள அபராதம் (ரூ) | திருத்திய / புதிய அபராதம் (ரூ) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பொது மற்றும் தனியார் இடங்களில் தூக்கி எறியப்படும் குப்பைகள் / வாகனங்களில் இருந்து குப்பை கொட்டுதல் | 500.00 | **5000.00** |
| 2. | தரம் பிரிக்கப்படாத கழிவுகளின் வகைகள். | | |
| | அ. தனி நபர் இல்லங்கள் | 100.00 | **1000.00** |
| | ஆ. அடுக்குமாடி குடியிருப்பு / குழு குடியிருப்புகள் | 1000.00 | **5000.00** |
| | இ. பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள் | 5000.00 | **5000.00** |
| 3. | அங்கீகரிக்கப்படாத பொது இடங்களில் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுதல் | | |
| | அ. ஒரு டன் வரை | 2000.00 | **5000.00** |
| | ஆ. ஒரு டன்னுக்கு மேற்பட்டவை | 5000.00 | **5000.00** |
| 4. | தோட்டக்கழிவுகள், மரக்கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் | 200.00 | **2000.00** |
| 5. | குப்பைத் தொட்டி / கழிவுநீர் பாதை / கால்வாய் / நீர் நிலைகளில் குப்பை கொட்டுதல் | 500.00 | **5000.00** |

| | | | |
|---|---|---|---|
| 6. | திடக்கழிவுகளை எரித்தல் | | |
| | அ. தனியார் இடங்கள் | 500.00 | **5000.00** |
| | ஆ. பொது இடங்கள் | 1000.00 | **5000.00** |
| | இ. வணிக வளாகங்களில் திடக்கழிவு உருவாக்குபவர்களால் குப்பைகளை எரித்தல் | 2000.00 | **5000.00** |
| 7. | மீன் வளர்ப்பு/பறவைகள்/இறைச்சி கழிவுகளை (வீடுகளைத் தவிர்த்து) தரம் பிரிக்காமல் கொடுப்பது | 1000.00 | **5000.00** |
| 8. | விற்பனையாளர்கள் / கூவி விற்பவர்கள் / கடை வியாபாரிகள் குப்பைத் தொட்டி / குப்பை கூடை வைக்காமல் இருப்பது | 100.00 | **1000.00** |
| 9. | **விற்பனையாளர்கள் / கூவி விற்பவர்கள் குப்பைகளை தரம் பிரிக்காமல் கொடுப்பது** | 200.00 | **2000.00** |
| 10. | எண்ணிலடங்காத மக்கள் சேர்ந்து நடத்தப்படும் நிகழ்ச்சிகள் / பொது நிகழ்ச்சிகள் நடந்த இடங்களில் 12 மணி நேரத்திற்குள் தூய்மைப்படுத்தாமல் இருப்பது | 5000.00 | **5000.00** |

இனிவரும் காலங்களில் மேற்கூறப்பட்ட உயர்த்தப்பட்ட அபராதத் தொகையினை செயல்படுத்துவதன் மூலம் சட்ட விரோதமாக பொது இடங்களில் குப்பைகள் / கட்டட இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுவது மற்றும் திடக்கழிவு மேலாண்மையை சரியாக பின்பற்றப்படாமை போன்ற விதிமீறல்கள் வெகுவாகக் குறைக்கப்படுவதுடன் சென்னை மாநகரம் தூய்மையாக பராமரிக்கப்படும்.

எனவே, பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னை மாநகரை தூய்மையாக வைப்பதற்காக மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு மாநகராட்சிக்கு உறுதுணையாக இருந்து முழு ஒத்துழைப்பு வழங்கிடவும், தங்கள் வீடுகள் மற்றும் கடைகள் உள்ளிட்ட பகுதிகளுக்கு குப்பைகளை சேகரிக்க வரும் தூய்மைப் பணியாளர்களிடம் குப்பைகளை முறையாக மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்கிடவும், ஒவ்வொரு மண்டலத்திலும் கட்டடம் மற்றும் கட்டுமானக் கழிவுகளை அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கொட்டிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**